WERC

# பிரவாகினி

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

செய்தி மடல்

மார்கழி 2011 இதழ் 33

# ஜனநாயக கோட்பாட்டு நீட்சியில் பெண்கள் உரிமை

ஜனநாயக குடியாட்சி என்பது பல கோட்பாட்டாளர்களாலும் ஆதரிக்கப்படும் ஒரு அரசியல் முறையாகவும் தத்துவமாகவும் இருந்து கொண்டு வந்திருக்கிறது. ஆனால் புரட்சி (Revolution) ஆயுதப் போர் (Armed Struggle) என்பன கோட்பாட்டு ரீதியில் ஒரு நிராகரிப்புக்குள் விழுந்து விடுகின்றது. அதிகாரப் பரவலாக்கம் - சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடுகள் குடியாட்சியை ஏற்றுக் கொள்வோராலும் நிராகரிக்கப்படுகின்றது. இது ஒரு விசித்திரமான மனப்போக்கு. ஒரு போலியான மனநிலை என்று தான் சொல்லவேண்டும். ஒரு புரட்சியோ ஆயுதப்போராட்டமோ குடியாட்சிக் காகவும் மனித உரிமை மறுப்புக்களுக்கு எதிரானதாக இருக்கலாம் என்பது ஏனோ பலருக்கு விளங்கவில்லை. அண்மையில் எகிப்து, சிறியா, லிபியா நாடுகளில் வெடித்த புரட்சிகள் எதற்காக தோற்றம் பெற்றன? மக்களது உரிமைகள் மக்களுக்கே சொந்தம் என்று எப்போது மக்கள் உணரத் தலைப்பட்டார்களோ அன்றே அவர்களது பாதி போராட்டச் சிந்தனைகள் தோன்றத் தொடங்கி விட்டன. குடியாட்சியை ஆதரிப்போர் அந்த ஆட்சிப்பொறுப்பை ஏனோ தெரிய வில்லை சிறுபான்மை யாருக்கு பகிர்ந்தளிக்க முன்வர வில்லை. ஆனால் தாங்கள் ஜனநாயக வாதிகள் என்று பிதற்றிக் கொள்வார்கள்.

அதிகாரப் பரவலாக்கம் (Devolution) கூட்டரசு (Federalism) என்ற Consociation என்ற கூட்டாட்சி போன்ற கொள்கைகள் குடியாட்சிக்கு அத்தியாவசியமானவை. குடியாட்சியை நிறுவன ரீதியாக இயங்கச் செய்பவை. உரிமைகள் சமமாகக் கையாளப்படவும் அதிகாரங்கள் சமநிலையில் பகிர்ந்தளிக்கபடாமலும் ஒரு அரசை நாம் குடியாட்சி என்றோ ஜனநாயகம் என்றோ கூறமுடியாது. இந்த இருவிளக்கத்தை ஏற்க முடியாதவர்கள் ஏதோ ஒரு வக்கிர மனப்பான்மைக்குட் பட்டவர்களாக இருக்க வேண்டும். மானிட ஜென்மங்கள் யாவருக்கும் சுயத்தை தேடுவது ஒரு வேட்கை. எங்களுடைய/ என்னுடைய விடயங்களை நாங்கள் தான் நடத்த வேண்டும், விரிவுப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் மற்றவர்களுடைய உரிமைகளும் அங்கீகரிக்கப் படவேண்டும் என்பது ஒரு நாகரீக மனிதரின் குணாம்சம். இப்பொழுது நாம் காண்பது அநாகரீகத்தின் உச்சங்கள். இதில் ஒரு முக்கிய விடயம் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். புரட்சியின் போக்கும் அல்லது ஆயுதப் போராட்டத்தின் போக்கும் வழிமுறைகளும் அந்த அநாகரீக எல்லைகளைத் தொடக் கூடாது, அநாகரீகம் தோல்வியிலேயே முடிவடையும்.

இதே நிலையில் தான் நாம் பெண் உரிமைகளையும் விளங்கிக் கொள்ளவேண்டும். மானிட வாழ்வு சுபீட்சமாகவும், நாகரீகமாகவும் நடக்க வேண்டும் என்றால் அதிகாரம் பரிவர்தனை தேவை. உரிமைகள் சமநிலை படுத்தப் படவேண்டும், அங்கீகரிக்கப் படவேண்டும், சமத்துவம் வேண்டும். வன்முறை (பேச்சில், நடத்தையில்) என்ற அநாகரீகம் தவிர்க்கப்பட வேண்டும். பெண்ணுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும். ஆண், பெண் சமத்துவம் முக்கியம் என்போர் (அதிகாரப் பரவலாக்கத்தை ஜனநாயகவாதிகள் எதிர்ப்பது போல்) ஆண்களும் சமைக்க வேண்டும், பிள்ளை பராமரிப்பும், வீட்டுவேலைகளை செய்யவேண்டும், என்று கூறினால் அது பெண்களுக்கு உரிய வேலை என்று கூறிவிடுவர். ஜனநாயக வாதிகள் புரட்சியை எதிர்ப்பது போல, பெண்கள் கேள்வி கேட்டு புரட்சி செய்தால் உலகம் அழியப்போகிறது என்று கூறுவர். சிறுபான்மைகளுக்கு அதிகாரம் தேவையில்லை, பெரும்பான்மை மக்களுக்கு அதிகாரம் தேவை. சிறுபான்மையோர் அடிபணிய வேண்டும் என்போரைப்போல ஆண்களுக்கே அதிகாரம் பெண்கள் அடிபணிந்து நடக்க வேண்டும் என்பர்.

பிரவாகினியின் இவ்விதழில் பெண்கள் புரட்சியும், ஒரு சில ஆண்களின் உயர் நோக்கும் சமுதாயப் பெண்களை அடிபணிய வைக்கும் கருத்தியல்களும் செறிந்து காணப்படுகின்றன.

**இந்த இதழில்.........**


- காலத்தால் முந்திய பெண்நிலைச் சிந்தனைகள்
- திருமண வயதெல்லையை......
- மலடிகளின் சோகமும், ஏக்கமும்
- பெண்களின் பால்மையும்.....
- பண்பாட்டின் விசித்திர கோலங்கள்
- சிறுவர் சிறுமிகளை......
- இன்னுமொரு பொன்னகரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் முந்திய பெண்நிலைச் சிந்தனைகள்

அப்துல் காதர் லெப்பை தனது காலத்திற்கு முந்திய கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவற்றில் ஒன்று பெண்களை பற்றியது. "பெண்களின் இன உரிமை போராட்டம்" எனும் கட்டுரையை 1963 ஆம் ஆண்டு எழுதினார். "அநாகரீகப் பெண்", "நாகரீகப் பெண்", "இலட்சியப் பெண்" என்ற மூன்று கவிதைகளிலும் பெண்நிலைவாத கருத்துக்களை முன்வைத்துள்ளார். அவர் பொதுவாகவே முஸ்லிம் பெண்களின் பின்தங்கிய நிலைபற்றியும், குறிப்பாக இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் "விலங்கிடாப் பறவைகளாக" அவர்கள் வாழும் அவலத்தைப்பற்றியும் கவலைகொண்டு "ஆயிஷாவின் உலகம்" என்ற ஓர் அற்புதக் கவிதையின் மூலம் தினகரன் பத்திரிகையில் அப்பெண்களை படம்பிடித்துக் காட்டினார். "ஆயிஷாவின் உலகம்" என்ற கவிதையின் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கின்றோம்.

அந்தச் சிறுமி ஆயிஷா பீபியவள்
ஐந்து வயதுவரை அயல் வீட்டுச் சிறாருடன்
கூடிவிளையாடிக் குதூகலமாய்த் திரிந்த பின்னர்
ஓதுகிற பள்ளியில் ஓதப் புறப்பட்டாள்;
இருநூறுயார்த் தொலைவில் இருந்ததச் சிறுபள்ளி,
காலையிலும் மாலையிலும் கடப்படி கடந்தவளாய்
ஓடிச்செலும் சிறுமி ஊர்நடுவே யுள்ள தமிழ்ப்பள்ளி
நோக்கியும் தானே நடந்துசென்றாள்; அடுத்த
தெருக்கடை, ஆலையடிப் பள்ளிவாசல், மருதடிச்
சந்தை, மண்வெட்டியார் வளவு என்ற அவளுலகம்
எல்லாம் கணக்கெடுத்தால் அரைமைல் சுற்றுக்குள்
அடங்கி யொடுங்கிவிடும்;
பத்து வயதுவரை பறந்து திரிந்தஅவள்
வீட்டு வேலிக்குள் விலங்கிடாப் பறவையாய்
வாழத் தொடங்கினாள், வளர்பருவ மெட்டியதும்
தாலியவள் கழுத்தில் தரித்திடத் தன்கணவன்
கைப் பறவையாகக் காலமினிப் போவதுதான்!

***

ஊரெல்லாம் சுற்றி உழைத்துவரு வான்கணவன்
அவன்போன இடங்களோ அவன்பட்ட பாடுகளோ
எவ்வளவு கஷ்டங்கள் இவன்பட்டு வருகிறான்
என்பவை பற்றி இம்மியும் கவலையின்றி
என்ன கொண்டுவந்தான் என்பதே கண்ணாகி
வாழத் தொடங்கினாள் வருஷ மொருபிள்ளை
வீடே புகலிடம் வேலியெனும் எல்லைக்குள்

எத்தனை வருடம் இவள்வாழப் போகின்றாள்!
தான்வாழும் கிராமம் தனைமுற்றாய் அறிந்தில்லை,
அடுத்த தெருவிலோ அதற்கடுத்த தெருவினிலோ
அவள்நடந்து பார்த்ததிலை அவ்வளவு சங்கோசம்!
கஷ்டத்தினாற் கணவன் காலம் முடிந்தொருநாள்
தலைவாசற் படிதாண்டிச் சந்தூக்கிற் போகின்றான்;
எங்கே அவன் 'கப்ர்' எங்கே அவனுறக்கம் என்பதைக்கூட
இவள் சென்று பார்த்ததிலை போவாருடன் போகப்
போகவிட்டு வழமைப்போல் வேலிக்குள் நின்றே
விடைபெறு கின்றாளவளும், இன்றோ அவன்போக்கு
இனித்திரும்பி வராதஒன்று
அப்படி யிருந்தும் அவள்போக்கு மாறவில்லை!
இவ்தான் மணைவி இணைபிரியாத் துணைவியிவள் அவனோ போகிறான்
அவளிடம் வந்ததுபோல் இதே கோலத்துடன்
இவள்போகும் பரியந்தம்
அதேவீ டதேவேலி அவள்கண்ட உலகமது.

**ஒரு விசேட செய்தி:** அவரது மகனான கலாநிதி அமீர் அலி முஸ்லீம் பெண்களின் பின்தங்கிய நிலைமையில் அக்கறை காட்டியபடியால் அவராலேயே போராட்டச் சிந்தனை என்ற நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

*போராட்டச் சிந்தனை- பக்கம் - X-XII*

# திருமண வயதெல்லையை 15 ஆக குறைப்பதற்கான அரசின் திட்டத்திற்கு இப்போதய அவசியம் என்ன?

18 வயதை பூர்த்தி செய்த ஆண், பெண் திருமண வயதை தற்போது அமைச்சர் ஜோன் செனவிரத்ன 15 ஆக குறைக்கவுள்ளார். இது சமூகத்தில் சிசு மரணவீதங்கள் அதிகரிப்பதற்கு காரணமாக அமையும். இவ் வயதில் திருமணம் செய்யும் பெண்களின் உடல் ஆரோக்கியம் மோசமாக பாதிக்கப்படுவதோடு உடலுறவு, குழந்தை பேறு போன்றவற்றால் நோய்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. இதனால் கூடுதலாக பாதிக்கப்படப்போவது பெண்களே என்பது குறிப்பிடதக்கது. இவைகள் சமூகத்தின் வளர்ச்சிக்கு தடையாக அமைவதோடு பெண்களின் கல்வி வளர்ச்சியையும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது.

சுகாதார அமைச்சு நடத்திய ஆய்வில் வருடத்திற்கு 40 ஆயிரம் சிறுமிகள் கர்ப்பம் அடைவதுடன் தினமும் 3 சிசுக் கொலைகள் தாய்மாரினால் செய்யப்படுவதாக கூறப்படும் நிலையில் இத்திட்டமானது சமூக சீர்த்திருத்தத்திற்கு பதிலாக சமூகச் சீரழிவுக்கே சிறுவர்களை இட்டு செல்கின்றது. இப்படியான சட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப் படுமானால் அது சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு முற்றுப்புள்ளியாகும். சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணத்தின் படி 18 வயதுக்கு குறைவானவர்கள் சிறுவர்கள் என்று அழைக்கப்படுவதோடு இந்த வயதுக்கு குறைந்த திருமணங்கள் "**சிறுவர் திருமணங்கள்**" என்ற வரையறைக்குள் அடக்கப்படுவதையும் நாம் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். சிறுவர்களின் எதிர்கால வாழ்க்கையை கருத்திற்கொண்டு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் இதனை கண்டிப்பதோடு அமைச்சின் இவ் ஆலோசனையையும் நிராகரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை பணயம் வைத்து ஏனையோரை காப்பாற்றிய வீர மங்கை ஒருத்திக்கு எம் அஞ்சலி

அவுஸ்திரேலியாவில் பிறந்த 'வெள்ளை எலி' என்று கூறப்பட்ட உலகப் புகழ் பெற்ற உழவாளி நான்சி வேக் (Nancy Wake) இரண்டாவது உலக மகா யுத்தக் காலத்தில் பிரான்ஸ் நாட்டை ஆக்கிரமித்த ஜேர்மனியின் நாசி (Nazi) ஹிட்லருக்கு எதிராக நேசப் (Allied Personal) படைகள் சார்பில் வீரத்துடனும் சாதூரியமாக உளவு வேலைகளை முன்னெடுத்து நேசப் படைகளின் உயிர்களை காப்பாற்றி ஹிட்லரின் ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டு வந்தவராவார். இவர் பிரிட்டிஷாரின் உளவுத்தந்திரங்களைக் கற்று நாசிப் (Nazi) படைகளை



வீழ்த்துவதற்கு தனது உயிரைப் பணயம் வைத்து செயலாற்றியவர். நாசி (Nazi) படைகளின் முதல் எதிரியாகக் கருதப்பட்ட இவர் பல தடவைகள் அவர்களின் சுற்றிவளைப்பு இடங்களிலிருந்து சாதூரியமாக தப்பியதால் அவருக்கு **'வெள்ளை எலி'** என்ற பட்டம் சூட்டப்பட்டது. இவர் ஒரு கவர்ச்சிகரமான தோற்றம் கொண்டவர். ஆனால் நாசிகள் ஆயுதத்துடன் இருக்கும் பலம் வாய்ந்த ஆணைத்தேடினார்கள். இவர் தப்புவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இவர் நியூசிலான் நாட்டில் 1912ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி பிறந்தார்.

தாதியாக பயிற்சி பெற்ற இவர் தனது மாமியாரின் பண உதவியுடன் அமெரிக்கா, லண்டன் போன்ற இடங்களுக்கு **சென்று ஊடகத் தொழிலில் சிக்காகோ ட்ரிபியூன்** (Chicago Tribune) என்னும் பத்திரிக்கைக்கு பாரிஸ் (Paris) நகரத்திலிருந்து ஊடகராகப் பணியாற்றினார். இத் தொழில் சம்பந்தமாக 1933இல் ஹிட்லரைச் சந்தித்தார். இச் சந்திப்பின் பின்னர்தான் அவருடைய அட்டூழியங்களை அறிந்து எப்பாடுபட்டாவது ஹிட்லரை வீழ்த்த வேண்டும் என்ற வைராக்கியம் அவருக்குள் பிறந்தது. இரண்டாம் உலக மகா யுத்தம் 1939ம் ஆண்டு ஆரம்பித்தபோது அவர் தன் கணவருடன் மார்செல்ஸ் (Marseille) என்னும் பிரான்ஸ் நகரத்தில் இருந்தார். பல யூதர்களையும், பிரிட்டிஷ் படைவீரர்களையும் காப்பாற்றினார். கணவன் இறந்த பின் தப்பி லண்டன் சென்று உளவு வேலைகளில் தேர்ச்சிப் பெற்று நாசிப் (Nazi) படைகளை விரட்டியடிப்பதற்கு பிரான்ஸ் உளவாளியாய் செயல்பட்டு ஆக்கிரமிப்பை முடிவிற்கு கொண்டுவர உதவினார். யுத்தம் முடிந்தபின் பிரிட்டன் நாட்டின் உளவாளியாக ஐரோப்பாவில் இயங்கினார். இவருக்கு அமெரிக்கா சுதந்திர மெடலையும், இங்கிலாந்து ஜோர்ஜ் மெடலையும் வழங்கியது. நான்சி வேக் அவரது 98வது வயதில் லண்டனில் அண்மையில் காலமானார்.

# வடக்கிலிருக்கும் பெண்களுக்கு உதவ விசேட திட்டம்

2011-07-24 திகதியில் Sunday Times பத்திரிகையில் வெளிவந்த செய்தியில் கைவிடப்பட்ட அல்லது கொல்லப்பட்ட சிசுக்களின் தொகை குறிப்பாக விடுதலைப் புலிகளின் கீழிலிருந்த இடங்களில் மோசமாக அதிகரித்திருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இதனை, தொடர்ந்து சிறுபிள்ளைகள் அபிவிருத்திக்கும் பெண்கள் அபிவிருத்திக்கும் பொறுப்பான மந்திரி இப் பத்திரிகையில் வெளிவந்த இச் செய்தியின் தொகுப்பை பார்த்தபின் வடக்கிலிருக்கும் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் உதவ ஒரு விசேட திட்டத்தை உருவாக்க தீர்மானித்துள்ளார்.

ஐக்கிய நாட்டின் UNDP, UNICEF மற்றும் Save the Children Fund போன்ற உதவிதிட்ட சபைகளோடு கலந்துரையாடி அவர்களின் உறுப்பினர்களையும் மந்திரி சபையின் அங்கத்தவர்களையும் உள்ளடிக்கிய குழு வடக்கிலிருப்பவர்களோடு கலந்துரையாடுவதோடு, மாவட்ட செயலாளர்களையும், காவல் துறையினரையும் சந்தித்து இத்திட்டத்தை வெகு விரைவில் செயற்படுத்தப் போவதாக கூறியுள்ளார். குடும்பக் கட்டுப்பாட்டு சபையும் இத்திட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இக்கரிசனையை வரவேற்கும் நாம் இது ஏட்டுச் சுரைக்காயாக மாறாமல் செயலூக்கம் பெறவேண்டும் என்று விரும்புகின்றோம்.

*நன்றி: Sunday Times*
*14.08.2011*

# மலடிகளின் சோகமும் ஏக்கமும்

"வட்டிலிலே போட்ட சாதம்
வாரித்தின்ன பிள்ளையில்லை
கிண்ணியிலே போட்ட சாதம்
கீறித்தின்ன பிள்ளையில்லை
அங்காடிக் கூடைதன்னை
அழைத்துவரப் பிள்ளையில்லை
தண்ணிக்குப் போகையிலே
தடம் மறிக்கப் பிள்ளையில்லை
மழை பெய்த வாசலிலே
மைந்தனடி காணேனே
மைந்தனடி காணேனே – நான்
மறுகி அழுகின்றேன்"

"இருளி இருளி என்று ஓதுவா – அம்மா
கொண்டையிலே பூ வச்சா
மலடிக்குப் பூ எதுக்கு என்பா
முத்தாரம்மன் கோவிலிலே
முன்னே போய் நின்னாக்க
மூளி மலடி விலகி நில்லுன்னு – அம்மா
மொறச்சிப் பேசி ஏசுவாக"

*அ.கா. பெருமாள்*

*நன்றி: உயிர் எழுத்து (ஆகஸ்ட் 2011 –பக்கம் - 72)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பால்மையும் அதனால் வேலைசெய்யும் பெண்களுக்கு ஏற்படும் தாக்கங்களும் வன்முறையும்

உள்நாட்டு வறுமையை விட வெளிநாட்டு கொடுமை மேல் என நினைத்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் பெண்களின் பரிதாப நிலைக்கு என்று முற்றுப்புள்ளி கிடைக்கும் என்றே தெரியாத நிலை பணிப்பெண்கள் விஷயத்தில் நடந்து வருகின்றது. வறுமை காரணமாக தங்களின் குடும்பத்தை கரைசேர்க்க செல்லும் பெண்கள் சொல்ல முடியாத சித்திரவதைகளை அனுபவித்து வருகின்றனர். ஒரு இலட்சம் பணிப்பெண்கள் வருடாந்தம் மத்திய கிழக்கிற்கு செல்வதோடு குவைத், சவூதி, கட்டார், டுபாய் போன்ற நாடுகளில் 8 இலட்சம் பணிப்பெண்கள் பணியாற்றி வருகின்றனர். அத்தோடு இத்தாலி, சைப்பிரஸ், உள்ளிட்ட நாடுகளில் 1 மில்லியன் பெண்கள் வேலைசெய்வது குறிப்பிடதக்க விடயமாகும். இப்படியாக வேலைசெய்யும் பணிப்பெண்கள் உடல் ரீதியான சித்திரவதைகள், பாலியல் ரீதியான சித்திரவதைகள், கொலைகள் போன்றவற்றிற்கு காலாகாலமாக முகம்கொடுத்து வருகின்றனர்.

கடந்த 2011 ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து 25 பணிப்பெண்கள் அங்கவீனர்களாக, பலாத்காரத்திற்கும் சித்திரவதைகளுக்கும் உட்பட்டவர்களாக நாடு திரும்பியதோடு கொலை, தற்கொலை, விபத்து, காணாமல் போதல் போன்றவற்றிற்கு பெண்கள் முகம்கொடுத்தது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இரசாயனத் திரவத்தை அருந்தியதாக குறிப்பிடப்பட்ட திலினகுமாரி இறந்தமை, தேவி சின்னையாவின் உயிரிழப்பு, ரோஹினி ராஜபக்ஷ என்பவரின் உடலில் இருந்து 7 ஆணிகளும், 3 கம்பிகளும் இருந்தமை, 4 ஆணிகள் ஏற்றப்பட்ட நிலையில் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு நாடு திரும்பிய மல்காந்தி, 23 ஆணி, கம்பிகளுடன் நாடு திரும்பிய ஆரியவதி, மஹாரகமவைச் சேர்ந்த நந்தாவதி, செல்லதுரை புஷ்பவல்லி போன்றோரை உதாரணமாக குறிப்பிடலாம். தனித்தனியாக இனபேதமற்ற முறையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என எந்த பேதமும் இன்றி எல்லோருக்கும் ஒரே விதமாக இக்கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

கடந்த மே மாதம் ஜோர்தானில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் வேலைசெய்த இலங்கையை சேர்ந்த 50 ஊழியர்கள் நாடு திரும்பினர் இதேவேளை ஜோர்தானில் **"கிளாசிக் தொழிற்சாலை"** யில் தொழிற்சாலை முகாமையாளர்களின் பாலியல் சேஷ்டைகளுக்கு மறுப்பு தெரிவித்தாலோ அல்லது எதிர்த்தாலோ அவர்கள் வல்லுறவுக்குட்படுத்தப்படுவதாகவும் தாக்கப்படுவதோடு, நாடு கடத்தப்படுவதாகவும் உலக தொழிலாளர் மற்றும் மனித உரிமைகளுக்கான நிறுவனம் தங்களது அறிக்கையில் இவற்றை அம்பலமாக்கியது. அதாவது **"அல் ஹசான் இன்டஸ்ரியல் எஸ்டேட்"** என்னும் தொழிற்சாலையில் இவ்வாறான செயல்கள் நடப்பதாக 82 பக்கங்களில் இவற்றை அவ்வமைப்பு வெளியிட்டதோடு, இவ்வாறான பாலியல் சேஷ்டைகளில் ஈடுபடுபவர் இலங்கை தேசத்தை சேர்ந்தவர் என்றும் அந்தநபர் வாராந்த விடுமுறை நாட்களில் 4 அல்லது 5 பெண்களை தனது உல்லாச விடுதிக்கு அழைத்து துஷ்பிரயோகம் செய்வதாகவும், அங்கு வேலை செய்பவர்களுக்கு கொடுப்பனவுகள் ஒழுங்காக கொடுப்பதில்லை என்பதோடு வேலைசெய்பவர்களை உற்சாகப்படுத்துவதாக கூறி அவர்களை தடவுதல் போன்ற துஷ்பிரயோகங்களை செய்வதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையை சேர்ந்தவரே இவற்றை செய்வதாக கூறும் இவ் அறிக்கை இவர் மீது 300ற்கும் அதிகமான முறைபாடுகள் கொடுக்கப்பட்டுள்ள வேளையிலும் இவரை 1 மாதம் மாத்திரமே விலக்கி விட்டு மீண்டும் அதே வேலைக்கு அவரை அமர்த்தியுள்ளதாகவும் கூறியுள்ளது.

இத் தொழிற்சாலையில் வேலைசெய்யும் பெண்கள் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், எகிப்து தேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2010 இல் ஜோர்தானில் பணிப்பெண்கள் வேலைசெய்வது கடினம் எனவும் வேலை வாய்ப்பு முகவர்கள், பணியகங்களுக்கு பணிப்பெண்கள் பிரச்சினை குறித்து உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் ஜோர்தான் நாட்டிற்கு பணிப்பெண்களை அனுப்புவதை தடைசெய்யப்போவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது. ஆனாலும் அத்திட்டம் சிறிது காலம் மாத்திரமே நடைமுறையில் இருந்தது. அதன் பின்னர் அதனைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லாது போய்விட்டது. இப்படியாக எடுக்கும் நடவடிக்கைகள் இடையில் நின்றுவிடாதப்படி பணிப்பெண்கள் விடயத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் **இதற்கு பொறுப்பானவர்கள் முறையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இலங்கை வருமானத்தில் வெளிநாட்டில் வேலைசெய்யும் பணிப்பெண்களின் வருவாய் ஒரு முக்கிய** இடத்தை பிடிப்பதோடு வருடாந்தம் 1 பில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு அந்நிய செலவாணியை பெற்றுக்கொடுப்பதையும் நாம் இங்கு சுட்டிக்காட்டுகின்றோம். இவ்வாறான பணிப்பெண்களின் நிலையையும் அவர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, பிரச்சினை போன்றவற்றை அறிந்திருக்க வேண்டியது பொறுப்பானவர்களின் முக்கியமான கடமையாகும். பணிப்பெண்களின் விடயத்தில் பாராமுகம் காட்டாமல் இனி வரும் காலங்களில் பணிப்பெண்கள் பலியாகாமல் தடுத்து, துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

> பெண்களின் அடிமைத்தன்மை பெண்களை மாத்திரம் பாதிப்பதாயில்லை. அது மற்றொரு வகையில் ஆண்களையும் பெரிதும் பாதிக்கின்றது. இதைச் சாதாரண ஆண்கள் உணருவதில்லை.
>
> \- தந்தைப் பெரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டின் விசித்திர கோலங்கள்

பண்பாட்டின் விசித்திர கோலங்களையும், வித்தியாசங் களையும் நாம் உணரவும் உள்வாங்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்ட மலைப்பகுதியில் தோடர் இனத்தவரின் திருமணம், மணப்பெண் கா்ப்பம் தரித்த பின்னரே அங்கீகரிக்கப்படுகின்றது. இதனை இவர்கள் பாரம் பரியமாக செய்து வருகின்றனர். அடர்ந்த காடுகளில் வாழும் இவர்களின் திருமணத்தில் இது விநோதமான பழக்கமாக இருந்துவருகின்றது. இவர்களின் சம்பிரதாயப் படி திருமணம் செய்ய முடிவெடுக்கும் மணமகனும், மணமகளும், மணமகன் வீட்டில் 2 மாதங்கள் தங்கவைக்கப்படுகின்றனர். இதன் பின்னர் அவள் கர்ப்பமுற்று 7 மாதமாக இருக்கும் போது திருமணச் சடங்குகள் நடைப்பெறும். இத் திருமணச்சடங்கை வில், அம்பு கொண்டாட்டம் என்ற பெயரில் கொண்டாடு கின்றனர். அதாவது பெண்ணின் கணவராக வரும் நபர் காட்டுக்குள் சென்று மரக்கிளைகளை பிய்த்து அதில் வில்லும், அம்பும் செய்து அதனை மணமகளின் கழுத்தில் மாலையாக போடுகின்றார். அப்படி போடப்படும் போது அந்தப்பெண் அதனை பெற்றுக் கொண்டால் '**நான் வயிற்றில் சுமப்பது உனது சிசுவைதான்**' என்று கூறுவதாக அர்த்தமாகும்.

பின்னர் தோடர் சமுதாயத்தின் மூத்தவர்களிடம் மணமக்கள் காலைத்தொட்டு ஆசீர்வாதங்களைப் பெறுவர்.

மூத்தவர்கள் மணமக்களின் தலையை தங்களது கால் விரல்களால் தொட்டு ஆசீர்வாதம் செய்வது விநோதமாகும். இதனை பார்ப்பதற்கு வெளிநாட்டு பயணிகளும் வருகை தந்தவண்ணம் உள்ளனர்.

பண்பாடுக்ளிலும் ஆண், பெண் சமத்துவம் விநோதமாக வெளிப்பட்டு நிற்கின்றது **பூலரேவு** கிராமத்தில். அதாவது ஆண்கள் பெண்களுக்கு தாலிக்கட்டும் காலம் சென்று பெண்கள் ஆண்களுக்கு தாலிக்கட்டும் நிலை வந்துள்ளது. உலகில் பல புதுமையான நிகழ்வுகள் வெளிப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் இத்திருமணம் வியக்க கூடியதாக தெரியவில்லை என்றாலும், வித்தியாசமான ஒன்றாக காணப்படுகின்றது. ஆந்திர மாநிலம் ஸ்ரீகாகுளம் மாவட்டம் பூலரேவு கிராமத்தில் ஒரிசாவைச் சேர்ந்த மீனவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் குல வழக்கப்படி திருமணத்தின் போது பெண்களுக்கு ஆண்கள் தாலி கட்டுவது போல பெண்களும் ஆண்களுக்கு மூன்று முடிச்சுப் போடுகின்றார்கள். இத்திருமணத்தில் வரதட்சிணை கொடுக்கும் பழக்கம் இல்லை என்றாலும், மணமகனுக்கு ரூபாய் நோட்டுக்களால் அலங்காரம் செய்வது வழக்கமாகும். குடும்பங்களில் தனித்தனியே திருமணங்களை செய்யாது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதாவது 100க்கு மேற்பட்ட ஜோடிகளுக்கு பிரமாண்டமாக திருமணங்களை நடத்துவது ஒரு சிறப்பான அம்சமாக காணப்படுகின்றது.

*நன்றி வீரகேசரி*

# பெண் பக்தர்களின் மீது நடந்து சென்று ஆசி வழங்கிய பூசாரி



ஞாயிறு வீரகேசரியில் வெளியிடப்பட்ட இச்செய்தி அருவருக்கதக்கதாகவும், திகிலூட்டுவதாகவும் பெண்களை ஏறி மிதிக்கு ஆண்பூசாரியின் ஆணவ நிலை ஒன்றையும் ஒருங்கே சித்தரிக்கின்றது. ஆடு, கோழி கொலையும் இரத்தத்தை உறிஞ்சுவதும் எமது பண்பாட்டின் அவல கோலங்களாக 1000 வருடங்களுக்கு முன் இருந்திருக்கலாம். ஆனாலும் பகுத்தறிவு ஓங்கிய 21ம் நூற்றாண்டில் இப்படி நடப்பதை அரசும், மக்களும், சமய நிறுவனங்களும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறார்களா? பெண் இனத்திற்கு சம உரிமையும் சம அந்தஸ்தும் கோரும் இக்காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான பெண்களின் உடலை ஏறி மிதிக்கும் இறைவன் அருள் கொண்ட ஒரு பூசாரி ஆசி வழங்குவதை எப்படி இச் சமூகம் எதிர்க்கொள்கின்றது. மேலும் திகிலூட்டுவதாக எருமை, கடா பலியிடும் நிகழ்ச்சியும் இடம்பெற்றதாக அறிகின்றோம். ஆண்டுதோறும் பக்தர் எண்ணிக்கை கூடிக்கொண்டு செல்வது இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு ஒரு எல்லைக் கோடா? என்று சமய நிறுவனங்களை நாம் கேட்கிறோம்.


*நன்றி வீரகேசரி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சிவத்தம்பி

பேராசிரியர் சிவத்தம்பி இறந்தப் பின் பலர் பலவிதமாக அவருடைய அறிவு நிலை, ஆழ்ந்த புலமை, விசேட



ஆளுமை, அவருடைய குணாதிசயங்கள் போன்ற தளங்களில் எழுதி விட்டார்கள். அவற்றை திரும்பவும் எழுதுவதில் ஒரு வித அர்த்தமும் இல்லை. அவற்றைப் பற்றி தெரியாதவர்களும் இல்லை. ஆனாலும் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தில் உள்ள நாம் ஒரு விடயத்தை கட்டாயமாக முன்வைக்க வேண்டும். பெண்நிலைவாத அறிவியலும் அதுப்பற்றிய கோட்பாடுகளும் பலருக்கு விளங்காமலும் பலர் அதை நிராகரித்த பொழுதுகளிலும் எங்களுக்கு பெரும் ஆதரவு தந்தவராக சிவத்தம்பி இருந்தார். பெண்நிலைவாதத்தின் அறிவுத் தன்மையையும் அவற்றின் கோட்பாடுகளையும், தேவைகளையும் நன்கு அறிந்து, புரிந்து எம்முயற்சிகளுக்கு ஆதரவு நல்கி ஊக்கமளித்த அவரது இயல்பை நாம் மறக்க முடியாது. அந்நிலையில் இவ் அஞ்சலி குறிப்பை மனப்பூர்வமாக நாம் ஆழ்ந்த துக்கத்துடனும் மரியாதையுடனும் முன்வைக்கிறோம்.

# நோர்வே உள்ளூராட்சித் தேர்தலில் 4 இலங்கைத் தமிழ்ப் பெண்கள் தெரிவு

நோர்வேயில் மாநகர மற்றும் உள்ளூராட்சி அவைகளுக்கான தேர்தல் 2011 ஆண்டு ஆவனி மாதம் 11, 12 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றன. ஒஸ்லோவிலும் நோர்வேயின் ஏனைய நகரங்களிலும் வெவ்வேறு கட்சிகளின் சார்பிலும் தமிழ் வேட்பாளர்கள் போட்டியிட்டு இருந்தனர். இத்தேர்தலில் நோர்வேயின் 5 நகர சபைகளில் 11 இலங்கை வேட்பாளர்கள் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில் நால்வர் பெண்கள் என்பதோடு ஏனைய ஏழு உறுப்பினர்கள் ஆண்களாவர். தொழிற்கட்சி சார்பில் ஒஸ்லோ நகர சபை வேட்பாளராகப் போட்டியிட்ட ஹம்சாயினி குணரட்ணம் தெரிவாகியுள்ளதோடு, லோறன்ஸ்கூ நகர சபை வேட்பாளராக தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட திலகவதி சண்முகநாதனும், ஸ்தொவ்னர் உள்ளூராட்சி அவைக்கு தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்ட சுமதி விஜயராஜ், ரம்யா ஆறுமுகம் ஆகியோர் உள்ளூராட்சி உறுப்பினர்களாக தெரிவாகியுள்ளனர். இவர்களில் ஹம்சாயினி குணரட்ணம், திலகவதி சண்முகநாதன் ஆகியோர் 2007 ஆம் ஆண்டு நடைப்பெற்ற தேர்தலில் உள்ளூராட்சி அவை உறுப்பினர்களாக முதன்முறை தெரிவுசெய்யப்பட்டதோடு, இம்முறை தேர்தலில் இரண்டாவது தடவையாக இந்த இருவரும் மீள்தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. நோர்வே நாட்டில் 2 ஆண்டுகளுக்கொருமுறை மக்கள் தேர்தலில் வாக்களித்து வருகின்றனர்.

# ஆணுக்கு என்ன உரிமை?



“ ஒரு பெண்ஜாதியை இழந்த ஆண், கலியாணம்
செய்து கொள்ளலாமா வேண்டாமா என்பதைப்பற்றி
எந்தப் பெண்ணாவது அபிப்பிராயம் சொல்ல வருகிறார்களா?
அப்படியிருக்க, புருஷனை இழந்தவள் கலியாணம் செய்து
கொள்ளலாமா? வேண்டாமா? என்பதைப்
பற்றி அபிப்பிராயம் சொல்ல புருஷனுக்கு
என்ன பாத்தியம் என்பது நமக்கு விளங்கவில்லை.
நாட்டில், சிறப்பாக நமது சமூகத்தில்
விதவைகள் கர்ப்பமடைந்து கர்ப்பத்தை அழிப்பதும்,
பிள்ளைகளைப் பெற்று கொலை செய்வதும்,
வீடுகளை விட்டு பெற்றோர் அறியாமல் நினைத்த புருஷர்களுடன் ஓடுவதும்,
பிறகு பொது விபசாரிகளாகி குச்சுகள் மாறுவதும்
முதலான காரியங்களை தினமும் கண்ணால் பார்த்தும் தாங்களாகவே
துன்பங்கள் அடைந்தும் வரும்போது விதவா விவாகம் சாஸ்திர சம்பந்தமா?
ஜாதி வழக்கமா? என்று பார்க்கும் மூடர்கள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களா
என்று கேட்கின்றேன். சாஸ்திரத்தில் இடம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?
ஜாதியில் வழக்கம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?
அதைப்பற்றி கவனிப்பதில் பலன் என்ன? புருஷனிழந்த பெண்ணுக்கு
புருஷ இச்சை இருக்குமா? இருக்காதா? அவளுக்கு புருஷன் வேண்டுமா? வேண்டாமா?
என்பதைத் தானே கவனித்து முடிவு கட்ட வேண்டும்?
அமாவாசையில் பிறந்த பிள்ளை திருடும் என்று ஜோசியத்திலிருந்துவிட்டால்
அந்த பிள்ளை திருடின திருட்டையெல்லாம் ஜோசயம் நம்புகிறவன்
சும்மா விட்டு விடுவானா என்று கேட்கின்றேன்.”

- *தந்தை பெரியார்*

*(பெரியார் களஞ்சியம் - தொகுதி- 05- பக்கம் - 64)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் மொழி

**இன்று, உலகம் முழுக்க எல்லா மொழிகளிலும் பண்பாடுகளிலும். பெண்களின் கவிதைகள் கலாசாரம் என்ற நுகத்தடி கொண்டு மிக மோசமாக ஒடுக்கப்படுகின்றன**

அரிதாகவே மொழியை வசப்படுத்தும் பெண்கள், தம் சொந்தக் குரலில் பேசத் தொடங்கும் போது, ஒரு பேரழிவிற்கான அறிகுறிகள் தென்படுவது போன்று கிடுகிடுத்துப் போய்விடுகின்றது ஆண் உலகம். அவதூறு, மிரட்டல், கைது, வன்முறை, கொலை, நாடு கடத்தல், இல்லாமல் ஆக்குதல் என்று அதிகாரத்தின் ஆயுதங்கள் பெண் கவிகள் மீது ஏவப்படுகின்றன. மொழியால் ஆன எல்லா உலகங்களிலும் பெண்களுக்கான நிலை இது தான். ஆ.்.ப்கான் கவிஞர் நாடியா அஞ்சுமான், தன் 25 வயதில் கொல்லப்பட்டார். படுபாதகமாக 'கௌரவக் கொலை' என்ற பெயரில் தன் கணவராலேயே கொல்லப்பட்டார் ஏனென்றால், அவர் ஒரு பெண்; மேலும் ஒரு கவிஞர் தணிக்கை செய்யப்பட்ட கவிதைகளை ஆ.்.ப்கானிஸ்தான் தெருக்கள் தோறும் ரகசியமாக பரப்புரை செய்தவர். (திருமணம் கிரிமினல் குற்றமாக்கப்படவேண்டும் என்ற பெரியாரின் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றது.) தஸ்லிமா நஸ்ரீன் மருத்துவராக மட்டும் பணி செய்திருந்தால் சமூகம் கொண்டாடியிருக்கும். கவிதை எழுதியதால் அவரை நாட்டை விட்டு வெளியேறச் சொன்னது. ஆணாதிக்கம் அடித்தது, உதைத்தது. மதவாதம் அவர் தலைக்கு விலை நிர்ணயித்தது. பெண்ணாக எனக்கு நாடில்லை; இந்த உலகமே என் நாடு என்று தஸ்லிமா வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார். இத்தனைக்கும் தஸ்லிமாவை இந்தியாவிலும் தங்க விடாமல் விரட்டியடித்த மேற்கு வங்காளம் மாக்ஸிய மாநிலம் வேறு.

கனக்கும் கேள்விகளை கவிதைகளில் கேட்டதாலேயே, செல்வி, ஈழத்தில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு 'இல்லாமல்' ஆக்கப்பட்டார். அவரது இருப்பிடத்திலிருந்து கையெழுத்துப் பிரதிகள், குறிப்புக்கள், **கடிதங்கள், புத்தகங்கள் அனைத்துமே அவர்களால் எடுத்துச்** செல்லப்பட்டது. அரசு மட்டுமல்ல ஆயுதக் குழுக்களும் பெண்கள் 'தன்னுணர்வை' பெறுவதை விரும்பவில்லை. சர்வதேச கவிஞர்கள் மற்றும் நாவலாசிரியர்கள் கூட்டமைப்பு உலக புகழ்பெற்ற கவிதைக்கான சர்வதேச விருதை கவிஞர் செல்வி கைது செய்யப்பட்டிருக்கும் போது அவருக்கு வழங்கி கௌரவித்தது. இந்த விருது வெளியீட்டு பிரசுரத்தில், மரணத்தையோ அல்லது சிறைவாசத்தையோ கவிஞர்கள் எதிர்கொண்ட போதும் அவர்கள் மனிதனது மொழியைப் பேசுகிறார்கள். கருத்துச் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு உருக்கொடுக்கிறார்கள். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் அதற்குப் போராடுவதற்கும் உலகம் தழுவிய முயற்சிகள் இருந்த போதிலும், மனிதனுடைய கௌரவத்தை நேர்மையாக பகிரங்கப்படுத்தும் குரல்களுக்கான அவமதிப்பும், கவிதைக்கான அவமதிப்பும் என்பது மனித வாழ்வுக்கான அவமதிப்பாக அநேகமாக வெளிப்படுகின்றது என்று குறிப்பிட்டிருந்தார்கள். அண்மையில் 'உலகின் அழகிய முதல் பெண்' என்ற எனது இரண்டாவது கவிதைத் தொகுப்பையும் எனது வலைப்பதிவையும் தடை செய்யவேண்டும் என்று இந்து மக்கள் கட்சியினர் பொலீஸ் கமிஷனரிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன், ம.க.இ.க ஆதரவு இணையதளமொன்று அதே கவிதைக்காக என்மீது ஆணாதிக்க வக்கிரத்தோடு அவதூறுகளை பரப்பியிருந்தது. எனது கவிதை தொகுப்பைத் தடைசெய்வது என்றால் முதலில் அவர்கள் எழுதிய நாச்சியார் திருமொழியைத் தடைசெய்யவேண்டும். ஆண்டாளைக் கடந்து நானோ எனது சக பெண் கவிஞர்களோ காமத்தையும் வேட்கையையும் எழுதிவிடவில்லை. நமது கோயில், கோபுரங்கள், குளங்கள், தேர்களில் இருக்கிற சிற்பங்களையும் ஓவியங்களையும் கொஞ்சம் நின்று பார்த்தால் தெரியும். நமது மரபிலேயே கலையில் ஒழுக்கவியல் மதிப்பீடுகள் என்று எதுவும் இருந்திருக்கவில்லை.

நமது பெண்கள் விலங்களுடன் இருக்கும் சிற்பங்கள் சீரங்கம் கோவில் மண்டபத்திலேயே இருக்கின்றன. கவிதை ஒன்று அழகுக் குறிப்பு கிடையாது. கவிதை வெறும் சொற்களால் ஆனதுமில்லை. சமூகம் அங்கீகரிக்கும் சொற்களால் மட்டுமே எழுதுவதற்குக் கவிதை அரசு அலுவலகக் குறிப்பல்ல. கவிதைக்கு புனிதச் சொற்கள் என்றோ, விலக்கப்பட்ட சொற்கள் என்றோ விதிகள் ஏதும் கிடையாது. காலங்காலமாக ஆண்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த இலக்கியத்தையும், மொழியையும் பெண்கள் கைப்பற்றும் போது ஆணாதிக்க அதிகாரமும் துடித்துப் போகிறது. அவள் தனது உடலையும் விருப்புகளையும் இச்சைகளையும் இலக்கியத்தில் பேசும்போது, கலாசாரம் கெட்டுவிட்டதாக ஆண்கள் கொதிக்கிறார்கள். பெண் விடுதலை, குடும்பத்தின் வன்முறை, சுதந்திரக் காதல், ஒழுக்கத் தடைமீறல் இவற்றையெல்லாம் வியக்கதக்க முறையில் காலத்தை தாண்டிச் சிந்தித்து அறிவித்த தந்தை பெரியாரின் மண்ணில் இன்று கவிதை கமிஷனர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வெறுமனே புகார் மிரட்டல் என்று இதை நான் அலட்சியம் செய்ய மாட்டேன். இவ்வாறான கலாசார அடிப்படைவாதிகள், மிரட்டல்களில் தொடங்கி கொலைகளில் முடிப்பார்கள் என்பதே வரலாறு. எதிர்ப்புகள் அச்சுறுத்தல்கள் இருந்தாலும் பெண் கவிதைகள் எதிர்ப்பை விட மேலோங்கி ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். இழப்பிற்கிடையே மிஞ்சும் சொற்களில் ஒளிர்கிறது பெண் வரலாறு.

***லீனா மணிமேகலை***

*நன்றி - குங்குமம்*

*07.04.2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சிறுமிகளை சிறுவர் சிறுமிகளாக வாழவிடுங்கள்

இன்றைய உலகம் எதிர்க்கொள்கின்ற பிரச்சினைகளில் மிகவும் ஆபத்தான சமூக பிரச்சினையாக சிறுவர்கள் மீதான வன்முறைகள், சிறுவர் உரிமைகள் மறுக்கப்படல் போன்றவை காணப்படுகின்றது. சிறுவர்களை தெய்வமாக நினைத்த காலங்கள் சென்று மிருகங்களை விடவும் மோசமாக பயன்படுத்தும் அளவிற்கு மனிதன் என்ற பெயர்கொண்ட பொல்லாத மிருகங்கள் செயற்பட்டு வருகின்றன. அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற எந்த வித்தியாசமும் இன்றி சகல நாடுகளையும் இந்த நோய் ஆக்கிரமித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாட்டின் ஆய்வின்படி 18 வயதுக்கு உட்பட்ட 15 கோடி சிறுமிகளும், 7 கோடியே 30 இலட்சம் சிறுவர்களும் ஓர் ஆண்டுக்குள் உடலுறவில் கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டதோடு வேறுவிதமான பாலியல் கொடுமைகளுக்கும் ஆளாகுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 36 சதவீத பெண்களும், 29 சதவீத ஆண்களும் சிறுவயதுகளில் ஏதாவதொரு வகையில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாவுவதாக அதே ஆய்வு குறிப்பிடுகின்றது. பாலியல் ரீதியான வன்முறைகள் மற்றும் இன்றி உணர்ச்சி மீதான வன்முறைகள், உடல் ரீதியான வன்முறைகள், உதாசீனம், ஓரவஞ்சனை போன்ற பிரச்சினைகளுக்கும் அநேக சிறுவர்கள் முகம்கொடுத்து வருகின்றனர். உலகில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களில் 50 சதவீதமானவர்கள் ஆசிய, பசுபிக் வலய நாடுகளை சேர்ந்தவர்களே ஆகும். இப்படியான துஷ்பிரயோகங்களில் ஈடுப்படுபவர்கள் குடும்ப உறுப்பினர்களாகவே கூடுதலாக காணப்படுவது ஒரு கொடுமையான செய்தியாக அமைகின்றது.

உலகத்தை இவ்வாறு நோக்கும்பொழுது எமது நாடும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இப்பொழுது இலங்கையில் சிறுவர்களை வைத்து விபசார தொழிலையும் செய்து வருகின்றனர். 1980 ஆம் ஆண்டுகளில் 14-16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளே விபசார நடவடிக்கையில் ஈடுப்பட்டிருந்தாலும் இப்பொழுது 10-14 ஆக வயதெல்லை குறைந்திருக்கின்றது. இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பெண்பிள்ளைகள் கடத்தப்பட்டு விபசாரத்தில் ஈடுப்பட செய்கின்றனர். இலங்கையை பொறுத்தவரையில் நாளொன்றுக்கு 3 சிறுவர், சிறுமியர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதோடு சிறுவர் தொழில்களிலும் ஈடுப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

2010 ஆம் ஆண்டு மனித அபிவிருத்தி தாபனத்தினால் நுவரெலியா, பதுளை, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் நடத்திய ஆய்வில் 17 சதவீதமான சிறுவர்கள் பாடசாலையில் இடைவிலகியவர்களாக காணப்படுவதோடு இவ்வாறு இடைவிலகியவர்களில் 11 சதவீதமானவர்கள் தோட்டங்களுக்கு வெளியே தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளதாகவும் 6 சதவீதமானவர்கள் தங்களுடைய வீடுகளில் தொழிலாளர்களாக காணப்படுவதாக ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதான நகரங்களான கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் வீட்டு வேலைகளுக்காக தரகர்களால் அமர்த்தப்படுவதோடு உணவகம், சில்லறைக்கடைகள், வாகனங்கள் திருத்தும் நிறுவனங்கள், தெருவோர விற்பனை, ஐவுளிக்கடைகள் போன்றவற்றில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதாக அதே ஆய்வு கூறுகின்றது. இலங்கையை பொறுத்தவரையில் குடும்ப உறுப்பினர்கள், அதிபர், ஆசிரியர்களினாலேயே சிறுவர் துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்தோடு சிறுவயது கர்ப்பமும், சிறுவயது திருமணங்களும் கட்டுப்பாடு இன்றி மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையும் காணப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களில் 70 சதவீத சிறுவர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளை வெளியில் சொல்வது இல்லை. உயிர் ஆபத்துகளுக்கு பயந்து இவர்கள் வெளியில் சொல்லாது இருப்பதே இதற்கு காரணமாகும். துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் நீதியை பெற முடியாத நிலையும் காணப்படுகின்றது. குற்றத்தை செய்யும் குற்றவாளிகள் அரசியல் பலத்தையும், பணபலத்தையும் கொண்டு சட்டத்தில் இருந்து தப்பித்து கொள்வதே இதற்கான மற்றுமொரு காரணமாகும். உலகளாவிய ரீதியில் 150 மில்லியன் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும், 1.5 பில்லியன் சிறுவர்கள் வன்முறைகளாலும், 182 மில்லியன் சிறுவர்கள் இரண்டாம் நிலை கல்வியை பெறமுடியாமலும், 85 வீதமான சிறுவர்கள் உளரீதியாக பாதிக்கப்படுவதாவும் யுனிசெப்பின் தகவல்கள் சிறுவர்களின் நிலையை உலகத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளது.

சுதந்திரமாக சிறுவர்கள் எதிர்காலங்களில் வாழவேண்டும் என்றால் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுப்படுபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனைகள் வழங்குவதுடன் அனைத்து மக்களுக்கும் சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். இத்தோடு மனிதன் எப்போது மிருக குணத்தை விடுத்து மனிதனாக வாழ ஆரம்பிக்கிறானோ அப்போது தான் சுதந்திரமாக சிறுவர்களும், பெண்களும் வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னுமொரு பொன்னகரம்

தேசிய மீனவர் ஒருங்கிணைப்பு மன்னார் மாவட்டத்தில் மடுக்கரை கிராமத்தில் ஒரு ஆய்வில் ஈடுப்பட்டது. இவ்வாய்வை நடத்திய அமைப்பாளர் முக்கிய இரு கேள்விகளை முன்வைக்கிறார் அவை பின்வருமாறு

01. விபசாரத்தில் ஈடுப்படும் பெண் பாவியா?
02. அந்த நிலையை உருவாக்கியவர் பாவியா?

முக்கியமான இந்த கேள்விகள் காலாகாலமாக எழும்பிக்கொண்டே வருகின்றது. புதுமைப்பித்தனின் **"பொன்னகரம்"** இதே கேள்வியை ஏற்கனவே கேட்டுவிட்டது. 420 குடும்பங்கள் வசிக்கும் இந்த **கிராமத்தில்** யாழ்ப்பாணம், வவுனியா, முருங்கன், முள்ளிக்குளம் போன்ற பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மடுக்கரையின் சனத்தொகையை கூட்டியுள்ளனர். பின் தங்கிய இக்கிராமத்தில் தண்ணீர் பிரச்சினையால் மழை காலங்களிலேயே விவசாயம் செய்ய முடிகின்றது. நிரந்தர தொழில் வாய்ப்போ, வாழ்வாதார வழியோ கிடையாதபடியால் வறுமையில் வாழும் இம்மக்கள் சமூக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. சரியான கல்வியோ, நல்ல உணவோ இல்லாத பெற்றோரும், பிள்ளைகளும் அவதிக்குள் ளாகுகின்றனர். இவ்வாய்வின் படி கிடைத்த ஒரு தகவல் இச் சமூகத்தின் அவல வாழ்வுக்கு ஒரு சான்று.

கணவனை இழந்த ஒரு தாய் தன் பிள்ளைக்கு ஒரு நேர சாப்பாட்டைக் கொடுக்க முடியாமல் போனது. இதனால் துன்ப நிலையில் இருந்த சிறுமி விபசாரத்தை தொடங்கியுள்ளார். விபசாரத்தில் ஈடுப்பட்ட பின்பு இச் சிறுமிக்கு தேவைப்பட்ட அனைத்தும் கிடைத்துள்ளது. எதற்காக ஏங்கி தவித்தோமோ அவையெல்லாம் இதற்கு பிறகு கிடைப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவிப்பதாகவும், விபசாரத்தை அவர்கள் வாழ்க்கையாக்கிக் கொண்டுள்ள தாகவும் ஆய்வில் இருந்து தெரியவருகின்றது.

பலவித அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் அரசு இப்பிரச்சினைகளை ஏன் கண்டுகொள்ள மறுக்கின்றது? சமூக சேவையால் அகற்றிவிடக்கூடிய பிரச்சினை இல்லை இது. பாரிய அவலத்தை அரசின் குறுக்கீட்டாலேயே தீர்க்க முடியும். வசிக்க ஒரு வீடு, வருமானத்திற்கு ஒரு உத்தியோகம், படிப்பதற்கு பாடசாலை, மூன்று நேர உணவு போன்ற அத்தியாவசியத் தேவைகளை ஈடுசெய்வது அரசின் முக்கிய கடமையாக இருக்கும் போது போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரத்தியேக சலுகைகள் வழங்க வேண்டும் என்ற கட்டாய நீதி ஏன் அரசினாலும், அரசை பிரதிபலிக்கும் அரச ஊழியர்களாலும் உணரப்படவில்லை? இச்செய்திகளை பாராளுமன்றத்தில் எடுத்தியம்பக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை சரியாக செய்கின்றார்களா? மகளீர் விவகார அமைச்சு ஏன் வாய் மூடி மௌனமாக இருக்கின்றது?

***தினக்குரல் ஜூலை 10ம் திகதி 2011ல் வெளிவந்த ரகுமானின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு இத்தகவல்கள் தரப்பட்டுள்ளது.***

# அமைதிக்கான நோபல் பரிசு மூன்று பெண்களுக்கு

இந்த வருடத்திற்கான சமாதானத்திற்கான நோபல் பரிசு 3 பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. லைபீரியாவின் ஜனாதிபதி எலன் ஜோன்சன் சேர்லீவ் (Ellen Johnson Sirleaf), அதே நாட்டைச் சேர்ந்த லெமஹ் கபோவீ (Leymaj Gbowee) மற்றும் யேமனைச் சேர்ந்த தவாக்குல் கர்மான் (Tawakkul Karman)ஆகியோருக்கு இந்த நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. சமாதானத்தை கட்டியெழுப்பும் பணியில் பெண்களின் பாதுகாப்புக்காகவும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான பணியில் முழுமையான பங்களிப்பு செய்யவும் வன்முறையற்ற போராட்டத்தில் ஈடுப்பட்டமைக்காகவே இந்த மூவருக்கும் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. சேர்லீவ் ஆபிரிக்காவின் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பெண் தலைவராவார்.



**"சமூகத்தின் அனைத்தும் மட்டங்களிலுமான அபி விருத்தியில் செல்வாக்கு செலுத்துவதற்கு ஆண் களுக்கு வழங்கப்படும் அதே அளவு வாய்ப்புக்கள் பெண்களுக்குகிடைக்காத வரையில் உலகில் ஜன நாயகத்தையும் முடிவான சமாதானத்தையும் எட்ட முடியாது"**

***நோபல் சபையின் தலைவர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் பிறக்கும் சிசுக்களின் கண்ணீர் அஞ்சலி




பாரம்பரியங்களிலும், இஸ்லாமியரின் சட்டத்தின் அடிப்படையின் கீழும் திருமணத்திற்கு முன்பு பெண்கள் கர்ப்பம் அடைந்து பிள்ளைப் பெறுவது மரண தண்டனைக்குரிய குற்றமாக பாகிஸ்தானில் கணிக்கப்படுகின்றது. நீதியும், பாரம்பரியமும் இப்படியிருக்க பாகிஸ்தானில் சிசுக்கொலைகள் வருடங்கள் தோறும் அதிகரித்து வருவது இப்பொழுது வெளிவந்த செய்தியாக அமைகின்றது. பொதுவாக கொல்லப்பட்ட 10 சிசுக்களை எடுத்தால் அதில் 9 சிசுக்கள் பெண் சிசுக்களாக காணப்படுவதாக தெரியவருகின்றது. சிசுக்கொலைகளுக்கு எதிராக செயற்பட்டு வரும் ஈதி நிறுவனத்தின் (Edhi Foundation) அறிக்கையில் கடந்த வருடம் மாத்திரம் பாகிஸ்தானில் 1000 த்திற்கு மேற்பட்ட சிசுக்கள் வீதியோரங்களிலும், குப்பைத் தொட்டில்களிலும் கைவிடப்பட்டதாக தெரிவிப்பதோடு இந்த கணிப்பீடு பிரதான நகரங்களில் எடுக்கப்பட்டதாகவும், இதனை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் கணிப்பீடு செய்திருந்தால் சிசுக்களின் எண்ணிக்கை இதைவிடவும் அதிகமாக காணப்படும் என்றும் குறிப்பிடுகின்றது.

கடந்த வருடம் மார்கழி மாதம் மாத்திரம் குப்பைத் தொட்டில்களிலும், வீதியோரங்களிலும் இருந்து கொல்லப்பட்ட நிலையில் 40 சிசுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டு 1210 சிசுக்களும், 2009 ஆம் ஆண்டு 999 சிசுக்களும், 2008 ஆம் ஆண்டு 890 சிசுக்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டதாக ஈதி அறிக்கை கூறுகின்றது. இதில் சுவாசத்தை அடைத்தும், சரீரங்களை எரித்தும், இஸ்லாமிய நீதியின்படி கல்லெறியப்பட்டும் கொல்லப்பட்டிருப்பது மிக கொடுமையான செய்தியாக அமைகின்றது.

இதனைப் பற்றி ஈதி நிறுவனத்தின் (Edhi Foundation) முகாமையாளர் தெரிவிக்கையில்: பெண் சிசுக்களே அதிகமாக கொல்லப்படுவதாகவும், அதற்கு அவர்களின் ஏழ்மை நிலையே காரணமாக அமைவதோடு, பாகிஸ்தானில் உள்ள பெண்கள் வேலைகளுக்கு செல்வதற்கு தடைகள் காணப்படுவதும், பெண்கள் ஆண்களிடம் தங்கி வாழும் சூழ்நிலை இருப்பதும் அவர்களின் ஏழ்மை நிலைக்கு ஒரு காரணம் என்றும் கூறியுள்ளார். ஒரு குடும்பத்தில் பெண் பிள்ளை பிறந்தால் அதை பாரமாக நினைக்கின்றனர். பாகிஸ்தானில் ஒரு பெண்ணை திருமணம் முடித்துக் கொடுப்பதற்கு 1 மில்லியன் ரூபா செலவிடப்படுவதே பெண் சிசுக்களின் கொலைகளுக்கு முக்கிய காரணம் என்று கூறுகின்றார்.

இக்கொலைகளை குறைப்பதற்காக ஈதி நிறுவனம் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக குறிப்பிட்டுள்ளது. அதாவது முழு பாகிஸ்தான் நாட்டிலும் 400 தொட்டில்களை அமைத்து ஒவ்வொரு இடங்களிலும் அவற்றை வைத்து, **"பிள்ளைகளை கொலை செய்ய வேண்டாம், தொட்டிலில் வைத்து விட்டு செல்லவும்"** என்று எழுதிவைத்தபோது அத்தொட்டில்களில் இருந்து வருடத்திற்கு 200 பிள்ளைகள் எடுக்கப்படுவதாக குறிப்பிடுகின்றனர். பாகிஸ்தான் நாட்டின் சட்டத்தின் படி கருசிதைவு செய்வது தண்டணைக்குரிய குற்றமாக கணிக்கப்படுவதோடு, தாய்க்கு கருவின் மூலம் உயிர் ஆபத்து இருந்தால் மாத்திரமே கரு சிதைவு செய்ய முடியும். சட்டத்தின் படி ஒரு பிள்ளையை விட்டு சென்றால் 6 வருட சிறை தண்டனையும், இறந்த பிள்ளையை ஒருவருக்கும் தெரியாமல் புதைத்தால் 2 வருட சிறைத் தண்டனையும், பிள்ளையை கொலை செய்தால் வாழ்நாள் முழுதும் சிறையில் இருக்க வேண்டி ஏற்படும். சட்டங்கள் இப்படியிருக்க இப்படியான சட்டங்கள் நடைமுறையில் சட்டமாக்கப்படாமல் இருப்பதோடு, கொலைகள் செய்பவர்களுக்கு எதிராக நீதிகள் வழங்கப்படுவதும் அரிதாகவே காணப்படுகின்றது. அத்தோடு கொலை செய்யப்படும் சிசுக்களின் சரியான பதிவுகள் காவல் துறையினரிடம் இல்லாமையால் அவற்றுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளையும், ஆய்வுகளையும் செய்யமுடியாத நிலைக்காணப்படுகின்றது. இப்படியான சிசுக்கொலைகளுக்கு எதிராக பல உதவி செய்யும் நிறுவனங்கள் செயற்பட்டு வந்தாலும் சிசுக்கொலைகளை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது ஒரு துக்ககரமான செய்தியாக அமைகின்றது.

பாகிஸ்தானில் கருசிதைவு குற்றம் என்று சட்டங்கள் காணப்பட்டாலும், விருப்பமானவர்கள் கருசிதைவு செய்வதற்கு சட்டத்தில் இடம் கொண்டுவரப்படுமானால் சிசுக்கொலைகளை குறைக்க முடியும் என்று ஒரு சிலர் கூறியதோடு சட்டங்களுக்கு பயந்து நீதிக்கு விரோதமான முறையில் கருசிதைவு செய்துகொள்ளும் கர்ப்பிணி பெண்களின் உயிர் ஆபத்துக்களையும் தடுக்க முடியும் என்றும் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

*நன்றி இணையத்தளம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நூலக புது வரவுகள்




## மாதொருபாகன்

**ஆசிரியர் - பெருமாள் முருகன்**

திருச்செங்கோட்டில் கோயில் கொண்டிருக்கும் பெண்ணுக்கு இடதுபாகத்தை கொடுத்து ஆண்பாதி, பெண்பாதி எனக்காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் வடிவமே மாதொருபாகன். அக்கோயில் சார்ந்து நிலவும் பல்வேறு நம்பிக்கைகள் வாழ்வனுபவமாக இந்நாவலில் காட்சியாகின்றன. மேலும் குழந்தை பேறு தொடர்பான சமூகப் பொதுக்கருத்துகள் இதில் விவாதிக்கப்படுகின்றது. விடுதலைக்கு முந்திய காலத்து நிகழ்வுகளை மையமிட்டு மண்மணம் ததும்பும் எளிய மொழிநடையில் பாலியல் சார்ந்து மனித மனங்களின் நுட்பங்களை ஊடுருவிச் செல்கிறது இந்நாவல்.




## அந்தக் காலத்தில் காப்பி இல்லை: முதலான ஆய்வுக் கட்டுரைகள்

**ஆசிரியர் - ஆ. இரா.வேங்கடாசலபதி**

ஆய்வுக் கட்டுரை என்றால் சுவையற்றிருக்கும் என்ற நினைப்பை முறியடித்து, விறுவிறுப்பான நடையில் இவை எழுதப்பட்டிருக்கின்றன. காப்பியும் புகையிலையும் தமிழ்ச் சமூகத்தில் எதிர்கொள்ளப்பட்ட முறை, திராவிட இயக்கத்தின் மொழிசார்ந்த அரசியல், பாரதியின் எழுத்து வாழ்க்கையை பற்றிய சமூகவியல் நோக்கு, கருத்துப் படங்கள் பகடி ஆகிய கலை வடிவங்கள் தமிழ் மரபில் பெறும் இடம் முதலானவை ஆராயப்படுகின்றன.



## முச்சந்தி இலக்கியம்

**ஆசிரியர் - ஆ. இரா. வேங்கடாசலபதி**

19ஆம் நூற்றாண்டின் கடைசியிலிருந்து 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வெளியான வெகுசன இலக்கியம் குறித்த விரிவான ஆய்வு இது. 'பெரிய எழுத்துப் புத்தகங்கள்', 'குஜிலி நூல்கள்', 'காலணா, அரையணாப் பாட்டுப் புத்தகங்கள்', தெருப் பாடல்கள் என்று பரவலாக அழைக்கப்பட்ட வெகுசன இலக்கிய கருவூலம் பற்றிய முதல் நூல் இது, பல்வேறு இடங்களில் சிதறிக்கிடக்கும் அரிய செய்திகளைக் கொண்டு சுவையாகவும் விறுவிறுப்பாகவும் எழுதப்பட்டிருக்கிறது.




## ஆமென்

**ஆசிரியர் - சிஸ்டர் ஜெஸ்மி**

துறவியான சகோதரி ஜெஸ்மி கன்னிகாஸ்திரீயின் வாழ்க்கை மடத்தையும், அவரை அவ்வாழ்க்கையில் இருந்து வெளியே செல்ல தூண்டிய பின்னணியை விவரிக்கிறது இந்நூல். மதத்தின் பெயரால் செய்யப்படும் ஆன்மீக மீறல்கள், மடங்களுக்குள் ரகசியமாக நிகழும் கொடுமைகளையும், துறவு வாழ்க்கையிலும் காமத்தின் நிழலும், சுயநலத்தின் கூச்சலும் நிரம்பியிருப்பதை கூறும் ஜெஸ்மியின் வரலாறு மறைக்கப்பட்ட உண்மை வாக்குமூலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிய போசனை கலந்துரையாடல்

மாதம் ஒரு முறை எம் நிறுவனத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு முக்கியமான சமகால முரண்பாடுகள் அடங்கிய ஒரு விடயத்தை தெரிந்தெடுத்து அதனை ஏனையோருடன் கலந்துரையாடும் ஒரு நிகழ்ச்சியை நாம் செய்துவருகின்றோம். இதனால் பலதெளிவுகளையும், செய்திகளையும் நாம் பெறக்கூடியதாக இருக்கின்றது.

## மாதம் ஒரு திரைப்பட காட்சி

மாற்றுக்கருத்துக்களை உள்ளடக்கிய இரசனைமிகுந்ததும், நல்ல கருத்துக்களை எடுத்தியம்பும் திரைப்படங்களை நாம் எமது நிறுவனத்தில் பார்த்து மகிழ்வோம். அதனை தொடர்ந்து ஒரு சிறு கலந்துரையாடலும் நடைபெறும். இதில் வெளியில் உள்ளவர்களும் கலந்து கொள்ளலாம்.

அநேகமாக இந் நிகழ்ச்சி மாதத்தின் மூன்றாம் வியாழக்கிழமை நடைபெறும். பங்குகொள்ள விரும்பியவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு திகதியை நிச்சயிக்கவும்.

தொலைபேசி - 011-2595296

## மொழி பெயர்ப்பு வசதிகளைக் கொண்ட பெண்கள் கல்வி ஆய்வுநிறுவன கேட்போர் கூடம்

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தினது கருத்தரங்கு மண்டபம் 50 சொகுசு இருக்கைகளைக் கொண்டது. மற்றும் சமகால மொழி பெயர்ப்புக் கருவிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ளது. உணவு, தேநீர், வசதி செய்து கொடுக்கப்படும். உங்கள் கூட்டம், கருத்தரங்கு, செயலமர்வு, படக் காட்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்குத் தகுந்த வசதிகள் வழங்கப்படும்

### WERC
### Auditorium Charges

| Hall Charges | A/C | Non A/C |
|---|---|---|
| • Full Day (8 hours) | 8,500/- | 7,000/- |
| • For Two Hours | 3,500/- | 2,250/- |
| • Every Additional One Hour | 750/- | 500/- |

| Facilities | |
|---|---|
| Television | 400/- |
| VCR | 300/- |
| Overhead Projector | 300/- |
| Multi Media Projector | 5000/- |
| Mikes (each) | 75/- |
| Simultaneous Translation Unit | 5000/- |
| Head Phones (each) | 300/- |

Service Charges 10% of the total amount
**Food from out will not be permitted**
Maximum Seating Capacity 50
Ample Parking Space.

**பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்**
58, தர்மராம வீதி, கொழும்பு 06.
தொலைபேசி : 2595296, 2590985
தொலைநகல் : 2596313

தொகுப்பு: செல்வி, மகேஸ்.
உதவி : வினித்தா

*Women's Education & Research Centre*
*58, Dharmarama Road,*
*Colombo - 06,*
*Sri Lanka.*
*T. P. : +94 11 2595296, 2590985*
*Fax : +94 11 2596313*
*E-mail : womedre@sltnet.lk*

**To :**

**Tamil Sangam**
**7,57th Lane**
**Rudra Mawatha**
**Colombo 06**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL : 2330195.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org